மாண்புமிகு திரு. சி. பொன்னேயன் : மத்திய அரசு மற்றும் ரெயில்வே துறையோடு மாநகராட்சிகள் நேரடியாகத் தொடர்பு கொள்வதில்லே. மாநில அரசுதான் நேரடியாகத் தொடர்பு கொள்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன்: இப்போது பஸ்களும், ஊர்திகளும் போய்க் கொண்டிருக்கின்றன. ரெயில்வேயின் அனுமதி இல்லாமல் ரெயில்வே கிராசிங்கில் உள்ள பாலத்தை விரிவுபடுத்த முடியாது என்று சொல்கிருர்கள். அதை அறிந்து இந்த அரசும் மாநகராட்சித் துறையும் பாலத்தை விரைவாகக் கட்ட ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னேயன்: இந்தப் பாலம் 18 டன் பளு தாங்க வேண்டியது. இப்போது தாங்கக்கூடிய நிலேயில் இல்லே. மத்திய அரசு 50 சதம் கொடுக்க வேண்டும் என்று மாநில அரசு குறிப்பினே அனுப்பியுள்ளது. அதை விரிவுபடுத்த மாநில அரசும் தொகை ஏற்கவேண்டிய நிலேயில் இருப்பதால், இதைப்பற்றி அரசு ஆலோசனே செய்துகொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Lalgudi Sivagnanam Co-operative Farmers' Marketing Society.

* 165 *Q.*—THIRU V. THANGAPANDIAN (on behalf of Thiru T. V. MUTHUKRISHNAN): Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether any irregularity in regard to the distribution of fertilizers in Lalgudi Sivagnanam Co-operative Farmers' Marketing Society, Tiruchirappalli district, has come to the notice of the Government;

(*b*) if so, whether any action was taken thereon; and

(*c*) the details thereof?

லால்குடி சிவஞானம் கூட்டுறவு விவசாய விற்பனே சங்கம்

திரு. வே. தங்கப்பாண்டியன் (திரு. தி. வி. முத்துகிருஷ்ணன் சார்பில்): மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விளுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சி மாவட்டம், லால்குடி சிவஞானம் கூட்டுறவு விவசாய விற்பனே சங்கத்தில், உர விநியோகத்தில் முறைகேடு நடந்தது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன்பேரில் ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

1978 மார்ச் 2]

(உ) அதன் விபரம் யாது?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) இச்சங்கத்தில் உர விநியோகத்தில் முறைகேடுகள் தெரியவந்த தால் கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப் பிரிவு 65-ன் கீழ் விசாரணைக்கு உத்தர விடப்பட்டது. உர விற்பனைத் தொகையைக் குறைத்து வரவு வைத்தது, லாரி வாடகை மற்றும் பொருட்கள் ஏற்றும் இறக்கும் கூலிக்கு போலி ரசீதுகள் தயாரித்து பொய் கணக்கு எழுதியது மூலம் ரூ. 2,611.31 கையாடல் செய்யப் பட்டதாக விசாரணை அறிக்கை மூலம் வெளிப்படுத்தப்பட்டது. குற்றத்தில் சம்பந்தப்பட்ட நபர்கள் மீது சட்டப்படி குற்ற நடவடிக்கை தொடர காவல் துறையினருக்குப் புகார் கொடுக்கப்பட்டது. புலன் விசாரணை முடிந்து, காவல் துறையினர் குற்றச்சாட்டு வழக்கு தொடர்ந்துள்ளார்கள். இவ்வழக்கு திருச்சி கூடுதல் முதல் வகுப்பு (குற்றவியல்) நீதிபதி நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளது.

Subsidized Prices for Pulse varieties.

* 166 Q.—THIRU V. THANGAPANDIAN (on behalf of Thiru K. S. MANI): Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) whether any decision was taken at the Chief Ministers' Conference held recently in New Delhi, to fix subsidized prices for pulse varieties; and

(b) if so, the action taken thereon?

பருப்பு வகைகளுக்கு ஆதாரவு விலை.

திரு. வே. தங்கப்பாண்டியன் (திரு. கோ. சி. மணி சார்பில்) : மாண்பு மிகு உணவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அண்மையில் புது டெல்லியில் நடைபெற்ற மாநில முதல்வர்கள் மாநாட்டில், பருப்பு வகைகளுக்கு ஆதாரவு விலை நிர்ணயிக்க முடிவு செய்யப் பட்டதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: (அ) இல்லை.

(இ) இவ்வினாவுக்கு இடமில்லை.